தினமலர் திருச்சி புதன் ஜனவரி 3 2018

KVB **Karur Vysya Bank**

*Smart way to bank*

பதிவு மற்றும் மத்திய அலுவலகம். ஈரோடு சாலை, கரூர்; - 639 002.
(CIN No.: L65110TN1016PLC001295)
மின்னஞ்சல்: kvbshares@kvbmail.com இணையதளம்: www.kvb.co.in
தொலைபேசி: 04324 269440-44 தொலைநகல்: 04324-225700

# அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 110 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்தப்பட்ட விதிகள், 2015 பிரிவு 22-ன் படி வங்கி உறுப்பினர்களுக்கு கீழ்க்காணும் அறிவிப்பை வெளியிடுகிறது.

1. முதலீட்டு பங்கேற்பாளர் அல்லது பதிவு மற்றும் பங்கு மாற்று முகவர் எஸ்.கே.டி.சி கன்சல்டண்ட்ஸ் லிமிடெட், (S.K.D.C Consultants Ltd.,) கோயம்புத்தூர் மூலமாக மின்னஞ்சலினை பதிவு செய்யாத அனைத்து உறுப்பினர்களுக்கும் 2018ம் வருடம் ஜனவரி மாதம் 02ம் தேதி, செவ்வாய்கிழமை அன்று தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பை தபால் வாக்குச்சீட்டுப் படிவம் மற்றும் சுய விலாசமிட்ட, முன்செலுத்திய அஞ்சல் உறையுடன் பதிவுத் தபால் மூலமாக, வங்கி அனுப்பி வைத்துள்ளது.

2. முதலீட்டு பங்கேற்பாளர் அல்லது பதிவு மற்றும் பங்கு மாற்று முகவர் மூலமாக மின்னஞ்சலினை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் 2018ம் வருடம் ஜனவரி மாதம் 02ம் தேதி செவ்வாய்கிழமை அன்று தேசிய பங்கு பத்திர முதலீட்டு சேவை லிமிடெட்டின் (NSDL) வாயிலாக, தபால் வாக்குசீட்டு அறிவிப்புடன் உள்நுழைவு முகவரி மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை மின்னஞ்சல் மூலமாக வங்கி அனுப்பி வைத்துள்ளது.

வங்கி, தபால் வாக்குச்சீட்டு முறைப்படி (மின்னணு வாக்களிப்பும் அடங்கும்) உறுப்பினர்களின் ஒப்புதலை பெற்று கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்ற முனைகிறது.

| வ.எண் | தீர்மானங்களின் விளக்கம் |
|---|---|
| 01 | கரூர் வைஸ்யா வங்கி ஊழியர்களின் பங்கு விருப்பத்திட்டம், 2011-ல் (KVB ESOS 2011) மாற்றம் செய்தல் மற்றும் செபி (ஊழியர்களுக்கான பங்கு சார்ந்த பயன்கள்) விதிகள் 2014-ன் படியும் ஒழுங்கமைத்தல் |

2017-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் நாளை வரையறுக்கப்பட்ட பதிவு நாளாகக் கொண்டு, வங்கியின் பங்குகளை பங்கு சான்றிதழாகவோ அல்லது இ-பங்குகளாகவோ வைத்துள்ள பங்குதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது வரையறுக்கப்பட்ட நாளில் அவரவர் கொண்டுள்ள பங்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

தபால் வாக்குச்சீட்டு செயல்முறையினை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்த வங்கியின் இயக்குநர் குழு, ப்ராக்டிசிங் கம்பெனி செயலாளர் திரு. S. சோலையப்பன், சேலம் அவர்களை ஸ்குருட்டினைசராக நியமித்துள்ளது.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) திருத்தப்பட்ட விதிகள் 2015, விதி 20, மற்றும் செபி (பங்கு பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தலுக்கான தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44ன் படியும், வங்கி மின்னணு வாக்களிக்கும் வசதியினை தேசிய பங்கு பத்திர முதலீட்டு சேவை லிமிடெட்-ன் (NSDL) இணையதள வாயிலாக ஏற்பாடு செய்துள்ளது.

மின்னணு வர்க்களிக்கும் முறை தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. மின்னணு வாக்களிப்பு தொடங்கும் நாள், புதன்கிழமை, ஜனவரி 03, 2018 காலை 10.00 மணி, மின்னணு வாக்களிப்பு முடியும் நாள் வியாழக்கிழமை, பிப்ரவரி 01, 2018 மாலை 5.00 மணி. அதன் பிறகு மின்னணு வாக்களிக்கும் வசதி செயல்பாடு முடக்கப்படும்.

உறுப்பினார்கள் வாக்களிக்க வாக்குச்சீட்டினை அல்லது மின்னணு வாக்களிப்பு வசதி இவற்றில் ஏதேனும் ஒன்றை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மாறாக ஒரு பங்குதாரர் இரு முறையிலும் வாக்குப் பதிவு செய்திருந்தால், மின்னணு வாக்களிப்பால் அவர் செலுத்திய வாக்குகள் மட்டுமே செல்லுபடியாகும், வாக்குச் சீட்டு முறையில் பதிந்த வாக்குகள் செல்லாது.

உறுப்பினர்கள் தங்களது பதிவு செய்த வாக்குச்சீட்டினை சுய விலாசமிட்ட முன் செலுத்திய அஞ்சல் உறையில், வியாழக்கிழமை, பிப்ரவரி 01, 2018 மாலை 5.00 மணிக்கு முன்னதாக ஸ்குருட்டினைசருக்கு கிடைக்கும்படி செய்திட வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம். அதன் பிறகு கிடைக்கப்பெறும் வாக்குச்சீட்டுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பு மற்றும் படிவத்தினை www.kvb.co.in என்ற வங்கியின் இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மின்னஞ்சல் மூலமாக தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பினை பெற்றவர்கள் வாக்குச்சீட்டு மூலமாக வாக்களிக்க விரும்பினால் தபால் வாக்குச்சீட்டு படிவத்தினை வங்கியின் இணையதளத்திலும் அல்லது http://evoting.nsdl.com/ என்ற இணையதள இணைப்பிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஸ்குருட்டினைசர் அறிக்கையுடன் கூடிய தபால் வாக்குச்சீட்டு முடிவுகள் 2018ம் ஆண்டு பிப்ரவரி 03ம் தேதி சனிக்கிழமை மாலை 5.00 மணி அல்லது அதற்கு முன்னதாக வங்கியின் மத்திய மற்றும் பதிவு அலுவலகத்தில் வெளியிடப்படும். மேலும் தபால் வாக்குச்சீட்டு முடிவுகள் www.kvb.co.in., www.evoting.nsdl.com, www.nseindia.com; www.bseindia.com ஆகிய இணையதளங்களிலும் வெளியிடப்படும்.

மின்னணு வாக்களிப்பு / வாக்குச்சீட்டு மூலமான வாக்களிப்பு தொடர்பான சந்தேகங்கள் / விளக்கங்கள் மற்றும் தபால் வாக்குச்சிட்டு பெறாதவர்கள் அல்லது தபால் வாக்குச்சீட்டு நகல் வேண்டுபவர்கள் Mr. Vishwa Sai Yakkali, Manager, Investor Relations Cell, கரூர் வைஸ்யா வங்கி, பதிவு மற்றும் மத்திய அலுவலகம், கரூர் - 639 002, தொலைபேசி 0432 4269440-44 மின்னஞ்சல் kvb_sig@kvbmail.com, kvbshares@kvbmail.com அல்லது திரு. K. ஜெய்க்குமார். மேலாளர், எஸ்.கே.டி.சி (SKDC) கன்சல்டண்ட்ஸ் லிமிடெட், பதிவு மற்றும் பங்கு பரிமாற்று முகவர், 1391/A-1, 3ம் தளம், கணபதி டவர்ஸ், கணபதி, கோயம்புத்தூர் - 641 006 (தொலைபேசி - 0422 - 4958995, 25839835-36, (info@skdc-consultants.com) அவர்களை அணுகவும்.

மின்னணு வாக்களிப்பு தொடர்பான விளக்கங்கள் மற்றும் சந்தேகங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி Mr. Rajiv Ranjan, Asst. Manager, National Securities Depositories Limited (NSDL), 4th Floor, 'A' Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai – 400 013. E-mail: evoting@nsdl.co.in.

கரூர் வைஸ்யா வங்கிக்காக

இடம்: கரூர்
தேதி: 02.01.2018

**சீனிவாசராவ். M**
கம்பெனி செயலாளர்